2023 ஏப்ரல் 10]

வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். அதற்குண்டான கருத்துரு இணை ஆணையர் வாயிலாகப் பெறப்பட்டிருந்தால், இன்றைய தினமே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவைப் பெற்று, அந்தத் தொகையை விடுவிப்போம். அதுமட்டுமல்லாமல், இன்றைய தினமே இணை ஆணையர் அவர்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தத் திருக்கோயிலை ஆய்வு செய்ய நடவடிக்கை எடுத்து, கூடுதலாக நிதி தேவைப்பட்டாலும், அந்த நிதியையும் துறை வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

எதிர்க்கட்சித் துணைத் தலைவரை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதை நேரடி ஒளிபரப்பு செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானங்கள். (குறுக்கீடு) இன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் என் அறைக்கு வந்தபோது 'LOP–க்கு, Zero hour–ல் எழுப்புவதற்கு எதுவும் வாய்ப்பு இருக்கிறதா?' என்று கேட்டேன். இன்றைக்கு வேண்டாம் என்று சொன்னார்களே! (குறுக்கீடு) இல்லை என்று சொன்னார்களே! அதைத்தான் சொன்னேன். (குறுக்கீடு) திரும்பவும் வந்து கொறடா சொல்லவில்லையே! (குறுக்கீடு) நாளைக்கு என்று சொன்னேன். (குறுக்கீடு) இல்லை, என்னிடம் நீங்கள் கேட்டீர்கள், (குறுக்கீடு) நாளைய தினம் எடுத்துக்கொள்வோமே. (குறுக்கீடு) நாளைய தினம் எடுத்துக்கொள்வோமே. (குறுக்கீடு) நாளைய தினம் எடுத்துக்கொள்வோம். (குறுக்கீடு) நாளைய தினம் எடுத்துக்கொண்டால் நல்லது. (குறுக்கீடு) ஏனென்றால், ஏற்கெனவே தீர்மானங்கள், (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

[*2023 ஏப்ரல் 10*

முற்பகல் 11–00

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதை ஏற்கக் கூடாது என்பது அல்ல. அதுவும் நீங்கள் எழுந்து நிற்கும்போது, அதற்கு தனி மரியாதை உண்டு. But, இன்றைக்கு அரசினர் தீர்மானம் இருக்கிறது. இரண்டாவது, Public Accounts Committee, Public Undertakings Committee இதுபோன்று Committee-யினுடைய தீர்மானங்கள் 6, 7 படிக்க வேண்டும். ஆகையினால், இன்றைக்கு அதை நீங்கள் எடுப்பதைவிட, நாளைக்கு அதை எடுத்துக்கொள்ளலாம் என்பதை நான் எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, தயவுசெய்து அமருங்கள். நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) இன்று காலையில், என்னுடைய அறைக்கு உங்களுடைய கொறடா வந்தார்கள். அவர்களிடம் நான் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: எதிர்க்கட்சித் தலைவருக்கு **...

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது, தேவையென்றால் நானே சொல்லியிருப்பேன். ஒருபோதும் நீங்கள் பேச மறுக்கவில்லை. (குறுக்கீடு) Zero Hour-ல் இதுவரை நீங்கள் எழுப்பிய பிரச்சினைகள் குறித்துப் பேச ஒருபோதும் மறுக்கவில்லை. இன்றைக்கும், உங்களிடம் கேட்டு, நீங்கள் சரி என்று சொன்னதற்குப் பிறகுதான் நான் அதை ஒத்துக்கொண்டேன். (குறுக்கீடு) இல்லை. (குறுக்கீடு) எதிர்க்கட்சி கொறடா அவர்கள்தான் எதிர்க்கட்சித் தலைவரிடம் சொல்கிறேன் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) இல்லை, நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) கொஞ்சம் ஒத்துழைப்புக் கொடுங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். . . (குறுக்கீடு) இல்லை, நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) இல்லை, நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) தயவுசெய்து

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 10] [பேரவைத் தலைவர்]

எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடு) Correct. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அவையில் ** சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. (குறுக்கீடு) அவையில் உங்களுக்கு உரிய மரியாதை கொடுக்கப்படுகிறது. நீங்கள் எழுந்துகொள்கிற நேரமெல்லாம், அதுமட்டுமல்ல, முன்வரிசையில் இருப்பவர்கள் எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது. (குறுக்கீடு) ஒருபோதும் மறுப்பது கிடையாது. (குறுக்கீடு) நான் பேச விடுவதில்லை என்று நீங்கள் பொத்தாம் பொதுவாகச் சொல்லக் கூடாது. (குறுக்கீடு) இன்று காலையில், உங்களுடைய கொறடா என்னுடைய அறைக்கு வந்தார்கள். அப்போது, அவர்களிடம், zero hour–ல் எதிர்க்கட்சித் தலைவர் இன்றைக்கு ஏதாவது பிரச்சினை எழுப்புகிறார்களா, விவகாரம் ஏதாவது கொண்டு வருகிறார்களா என்று நான் கேட்டேன். அதற்கு அவர் இல்லையென்று சொன்னார். குறுக்கீடு) அப்படி ஏதாவது இருக்கிறது என்றால், நான் கேட்டுவிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால், அவர் கேட்டுச் சொல்லவில்லை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவ்வளவு insist செய்வதால், என்னவென்று கேளுங்கள். கேட்டதற்குப் பின்னர், அது genuine ஆக இருந்தால், எடுத்துக்கொள்ளலாமா அல்லது தள்ளி வைக்கலாமா என்பதை நீங்களே முடிவு செய்து சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியைப் பொறுத்தவரைக்கும், பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்களால் எதிர்க்கட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதேபோல, எதிர்க்கட்சியில் உள்ள பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்களால் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஆனால், நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இதுவரை பலமுறை

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [*2023 ஏப்ரல் 10*

கடிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறீர்கள். மீறி, நாங்கள் எதைச் சொன்னாலும் நீங்கள் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறீர்கள். இது எங்களுடைய உரிமை. காலம் காலமாக அவையிலே எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அருகருகே அமர்ந்து பேசக்கூடிய வாய்ப்பை பெற்றிருக்கிறது இந்த அவை. அந்த அடிப்படையிலே, எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆகியோர் பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். எதிர்க்கட்சித் தலைவரை ஏற்றுக்கொண்டீர்கள். ஆனால், எதிர்க்கட்சித் துணைத் தலைவரை இன்றுவரை ஏற்றுக்கொள்ள மறுக்கிறீர்கள். கேட்டால், நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது என்று சொன்னீர்கள். வழக்கு குறித்தும் நீதிமன்றத்திலே தீர்ப்பு வந்துவிட்டது. அதன்படியாவது எங்களுக்கு நீங்கள் தீர்ப்பு வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழக்கு இருக்கிறது என்று ஒருபோதும் நான் இந்த அவையில் பதிவு செய்யவில்லை. (குறுக்கீடு) நான் சொன்ன ஒரே பதில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குத்தான் அவை விதியின்படி இடம் இருக்கிறது. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்கிற பதவி குறித்து விதிகளில் இல்லை. அதனால் அதைப் பற்றி ஒரு கேள்வி எழவில்லை என்றுதான் நான் சொல்லியிருக்கிறேன். அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் 60 பேர் என்னுடைய அறைக்கு வந்து கேட்டார்கள். முன்னாள் சபாநாயகர் உட்பட எல்லோரும் என்னுடைய அறைக்கு வந்து பேசினார்கள். அப்போது அவர்களிடம் எல்லா விவரங்களையும் கேட்டுக்கொண்டு, நான் பதில் சொல்லி அனுப்பியிருக்கிறேன். அதேபோல, இருக்கை விவரங்கள் குறித்து கேட்டார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவரை உங்களுடைய இருக்கைக்கு பக்கத்திலே அமர வைக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கொரு நீண்ட விளக்கம் இந்த அவையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு, மக்கள் பிரச்சினைகளைப் பற்றி நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். அதிலே எந்தவித குறுக்கீடும் நாங்கள் செய்யவில்லை.

ஏற்கெனவே, இரண்டு தினங்களுக்கு முன்பு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் வெளிநடப்பு செய்யும்போது, இங்கே ஒரு கருத்தை பதிவு செய்துவிட்டுச் சென்றார்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள், நான் சொல்லி முடித்துவிடுகிறேன். பிறகு

2023 ஏப்ரல் 10] [பேரவைத் தலைவர்]

நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) ஒரு கருத்தை பதிவு செய்துவிட்டுச் சென்றார்கள். அதாவது, எங்களுக்கு எதிராகச் சொல்லக்கூடிய கருத்துகளுக்கு மறுப்புத் தெரிவிக்க எங்களை allow *செய்யவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் அன்றைக்கு எவ்வளவு நேரம் பேசினார்கள் என்று உங்களுக்கே தெரியும். அப்போது பல குறுக்கீடுகளை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் செய்திருக்கலாம். ஆனால், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் அமைதியாகத்தான் இருந்தார்கள். (குறுக்கீடு) இல்லை, நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)* Maximum *எல்லா அமைச்சர்களிடமும், எதிர்க்கட்சிகளைப் பேச விடுங்கள்; குறித்து வைத்துக்கொண்டு பதில் சொல்லுங்கள் என்றுதான் சொல்கிறேன்.*

முற்பகல் 11-05

பேரவையினுடைய நடைமுறையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள்தான் மானியத்தில் முதலில் பேசுவார்கள். நிறைவாகவும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள்தான் நிறைவு செய்வார்கள். அதற்கு இடையில் மாமன்ற உறுப்பினர்கள் பேசியதில் ஏதாவது தவறான கருத்து இருந்தால் நீக்கச் சொல்லியிருக்கலாம். அன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள் பேசுகின்றபோது, இரண்டு விஷயங்களைப் பற்றி சொன்னார்கள். அதற்குத்தான் நீங்கள் குறுக்கிட்டுப் பேச எழுந்தீர்கள். அந்த விஷயம் என்னவென்றால்; நாங்கள் இப்போது ஒன்றரை இலட்சம் மின் இணைப்புகள் கொடுத்திருக்கிறோம். நீங்கள் கொடுக்கவில்லை என்று சொன்னார் அது ஒன்று. இரண்டாவது, இதற்கு முன்னால் கடந்த காலங்களில் ரேஷன் கடைகளில் உள்ள அரிசிகளில் மோசமான அரிசி, கலர் அரிசிகள் எல்லாம் இருந்தன. இப்போது, நாங்கள் sorter *போட்டு அடித்து, அது இல்லாமலேயே மாற்றியிருக்கிறோம் என்று சொன்னார். இதில் எதிர்க் கருத்து இருக்கிறது, உங்களுக்கு இதை நீக்க வேண்டுமென்று சொன்னீர்களேயானால், நீங்கள் இப்போதுதான் அந்த* sorter *என்கிற நவீனமுறையைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதற்கு முன்பு கிடையாது. உங்கள் ஆட்சியில் அதைத்தான் செய்தீர்கள். நாங்களும் அதைத்தான் செய்தோம் என்று சொல்லியிருக்கலாம். (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். எப்போதுமே, முன்வரிசையில் உள்ளவர்கள் யார் எழுந்தாலும், (குறுக்கீடு) பழைய மரபுதான். (குறுக்கீடு) இப்போதும் நான் சொல்கிறேன். நீங்கள் எழுந்து, இதை*

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 10

நீக்குங்கள் என்று சொல்லியிருந்தால், அதை நான் நீக்கியிருப்பேன். நீங்கள் என்ன சொன்னீர்கள், இன்னொரு உறுப்பினரைப் பேச அனுமதி கேட்டீர்கள். இதுவே ஒரு மரபானது என்றால், (குறுக்கீடு) இல்லை, நான் தரக் கூடாது, தருவது என்பது எல்லாம் என் உரிமைதானே. அது ஒரு precedent. ஒரு மரபு நடைமுறையில் இருக்கிறது. அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. கிருஷ்ணமூர்த்தி அவர்களை வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை மானியத்தில் கேள்வி கேட்க அனுமதித்தேன். கொடுக்கக் கூடாது என்பது இல்லை. அன்றைக்கு மாலைக் கூட்டம் நேரத்தைப் பொறுத்து எழுந்தீர்கள். உடனே நான் என்ன என்று கேட்டேன். நீங்கள் தவறான (குறுக்கீடு) எங்களை பதிவு செய்யவிடமாட்டேன் என்கிறார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். தவறான பதிவு இருக்கிறது என்று சொன்னால், உண்மையிலேயே, நடுநிலையோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நீக்கச் சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் உடனே நான் அதை நீக்குகிறேன். எந்தவகையிலும், உங்கள் கருத்தை இங்கே பதிவு செய்யக் கூடாது என்பதை ஒருபோதும் நானும் விரும்பவில்லை, மாண்புமிகு முதல்வர் அவர்களும் விரும்பவில்லை, இந்தச் சபையும் விரும்பவில்லை. அதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, இன்றைக்கு ஒரு நாளைக்கு (குறுக்கீடு) உங்களிடம் கேட்டுத்தான்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு நிமிடம் பேசினால், நீங்கள் ஐந்து நிமிடங்கள் பேசி பதிய வைத்துவிட்டீர்கள். அவர்கள் பேச்சுகள் மட்டும்தான் பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் வருகின்றன. நாங்கள் வைக்கின்ற கோரிக்கை எதுவுமே வருவதில்லை. ஆகவே, இது எங்களுடைய கோரிக்கை. காலங்காலமாக, திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, மாண்புமிகு அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களும் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்திருக்கின்றார்களே! இது காலங்காலமாக கடைபிடிக்கப்படுகின்ற மரபு. அதிக எண்ணிக்கையில் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக தேர்ந்தெடுக்கின்றபோது துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். அதை நீங்கள் மரபு என்கிற அடிப்படையிலே வழங்க வேண்டுமென்று கேட்கின்றோம். அதை நீங்கள் இதுவரை வழங்கவில்லை.

அதேபோல, சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகள் பேசுகின்ற கருத்துகளை தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பு

2023 ஏப்ரல் 10] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

*செய்யப்படும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் வெளியிட்டிருக்கிறீர்கள். ஆனால், நாங்கள் பல முறை கேட்டோம். இதுவரை, எதிர்க்கட்சித் தலைவர் பேசுவது, நேரடி ஒளிபரப்பு செய்யப்படுவதில்லை. ஆனால், அதற்குப் பதில் சொல்வது மட்டும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வது, அதேபோல் மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வது மட்டும் ஒளிபரப்பப்படுகிறது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் என்ன பேசுகிறார் என்று மக்களுக்குத் தெரிந்தால்தானே, பதிலும் சரியாகப் புரியும். இதுவரை நேரடி ஒளிபரப்பு செய்யப்படவில்லை. அதை நீங்கள் ** செய்கிறீர்கள். எங்களுடைய கருத்துகள், . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** *என்கிற வார்த்தையை நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடு) பேசினதையெல்லாம் எடுக்கவில்லை. கேள்வி-பதில் முழுமையாக ஒளிபரப்பப்படுகிறது. இதில் எதிர்க்கட்சி, ஆளும்கட்சி (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் என்ன குற்றச்சாட்டு சொல்கின்றாரோ, அதே குற்றச்சாட்டை நாங்களும் அங்கிருந்து சொல்லியிருக்கிறோம். அன்றைக்கு, உங்களை, நீங்களே காண்பித்துக்கொண்டு, எங்களை காண்பிக்கவில்லை என்று சொன்னோம். (குறுக்கீடு) எங்கள் முகத்தைக்கூட நீங்கள் காட்டியது இல்லை. மாண்புமிகு அமைச்சர்களை மட்டும் காண்பிக்கிறீர்கள் என்று நான் ஆயிரம் முறை இதுகுறித்து பேசியிருக்கிறேன். சார், இப்போது நீங்கள் என்ன பேசுகிறீர்களோ அதை நான் பேசியிருக்கிறேன். நான் என்ன பேசினேனோ அதை நீங்கள் பேசுகிறீர்கள். 'நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்' என்பதுபோல். (சிரிப்பு) (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Live telecast *செய்வதில் எதையுமே ** செய்யவில்லை. (குறுக்கீடு) கேள்வி பதில் (குறுக்கீடு) இல்லை, எல்லாம் பதிவில்தான் இருக்கிறது.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சித் தலைவர் நாட்டு மக்களுடைய பிரச்சினையை சட்டமன்றத்தில் எடுத்து வைக்கின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொண்டு வந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். மற்ற அமைச்சர்களிடம் கொண்டு வரும்போது அவர்கள் பதில் அளிக்கின்றார்கள். நாங்கள் கேட்கின்ற கேள்விக்கு அவர் பதில் சொல்வது மட்டும்தான் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது. நாங்கள் என்ன கேள்வி கேட்கிறோம், என்ன கருத்தைச் சொல்கிறோம் என்பது வருவதே இல்லை. அது ** வேறு என்ன வார்த்தையைப் போட முடியும். அதுமட்டுமல்ல. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

முற்பகல் 11–10

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *ஒரேயொரு நிமிடம், நான் பேசி முடித்துவிடுகிறேன். இரண்டாவது, கடந்த சட்டமன்ற பொதுத் தேர்தலின்போது உங்களுடைய தேர்தல் அறிக்கையிலேயே, 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால், சட்டப் பேரவையில், சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகின்ற கருத்துகள் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படும் என்று கொடுத்திருக்கிறீர்கள்.' நீங்கள் 85 சதவிகிதம் தேர்தல் அறிக்கையில் சொன்னதை நிறைவேற்றிவிட்டோம் என்று சொல்கிறீர்கள். எங்கே நிறைவேற்றியிருக்கிறீர்கள்? இது முக்கியமான பிரச்சினை; நாட்டினுடைய பிரச்சினை; எதிர்க்கட்சி என்ற முறையில், அவையில் எடுத்துவைக்கின்ற கருத்துகளை நீங்கள் நேரடி ஒளிபரப்பு செய்யமாட்டேன் என்கிறீர்கள். கேட்டால், அதற்கும் ஏதாவது ஒரு எதிர்மறை கருத்தைத்தான் சொல்கிறீர்களேயொழிய, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *நீங்கள், . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். அதையும் கேட்டுக்கொள்ளுங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 ஏப்ரல் 10] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லட்டும், (குறுக்கீடு) அமைச்சர் சொல்லட்டும், சேர்த்து பேசட்டும்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பேரவைத் தலைவராக பொறுப்பேற்றதிலிருந்து, ஜனநாயக ரீதியாகத்தான் இந்தச் சட்டமன்றத்தை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவர் எப்பொழுதெல்லாம் பேச வாய்ப்பு கேட்கிறாரோ, அப்போது எல்லாம் அனுமதிக்கப்படுகிறது. எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் கேட்கிறபோதும் அனுமதிக்கப்படுகிறது. அதேபோன்று முன்வரிசையில் இருக்கின்ற பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் எல்லாம் கேட்கிறபோது நீங்கள் வாய்ப்பு கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறீர்கள். அதில் ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை. இதையெல்லாம் படிக்க வேண்டுமென்று சொன்னால், காலநேரம் அதிகமாகிவிடும். கடந்த ஆட்சியில் நாங்கள் 10 ஆண்டுக் காலம் எதிர்க்கட்சியில் இருந்தபோது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சில* ruling *கொடுத்திருக்கிறார்கள்.*

பொதுவாக, அவையில் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் Zero Hour*-ல் ஏதாவது ஒரு பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பதில் இருந்தால்தான், அன்றைக்கு விவாதிப்பது பொருத்தமாக இருக்கும். இல்லையென்று சொன்னால், ஒரு செய்தியாக வந்துவிடும். அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையில் இருந்த தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவராக இருந்த எங்களுடைய முதலமைச்சர் அல்லது எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்த அண்ணன் அவை முன்னவர் அவர்கள் கேள்வி எழுப்புகிறபோது, "பதில் அமைச்சர்களிடத்தில் இல்லை என்று சொன்னால், ஒரு பகுதியாகத்தான் அந்தக் கேள்வி வருமே தவிர, பதில் வராமல் அன்றைக்கு பத்திரிகையில் வந்துவிடும். அதனால், பதில் இருந்தால் அனுமதிக்கின்றேன்" என்று ஏற்கெனவே இதே மாமன்றத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது இது ஒன்று. அதற்கு அடுத்தபடியாக இங்கே பல மானியக் கோரிக்கை விவாதங்களில் பேசுகிறபோது முன்னாள் அமைச்சர்கள் எல்லாம் எழுந்து பதில் சொல்ல வேண்டுமென்று அவர்கள் கருதுகிறார்கள். அது ஒன்றும் தவறல்ல. அதற்கு ஏற்கெனவே,* ruling*-ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், "நீங்களெல்லாம், ஏற்கெனவே முன்னாள்*

[திரு. எ.வ. வேலு] [*2023 ஏப்ரல் 10*

அமைச்சர்களாக இருந்திருக்கிறீர்கள். அமைச்சர்கள் எழுந்து சொல்கிறபோதெல்லாம் முன்னாள் அமைச்சர்கள் பதில் சொல்லிக்கொண்டிருப்பார்கள் என்று சொன்னால், சபைக்கு நேரம் இல்லை, என்னால் நடத்த முடியாது. நீங்கள், ஏதாவது கருத்து சொல்ல வேண்டுமென்றால், உங்கள் கட்சியின் சார்பாக பேசுகிற உறுப்பினரிடத்தில் கொடுத்து நீங்கள் பேசச் சொல்லுங்கள்" என்ற அடிப்படையில்தான் இந்தப் பொருள் இருக்கிறதேயொழிய, வேறு ஒன்றும் இல்லை. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். நீங்கள் ஏதோ ஒரு முடிவில் பேசுகின்ற மாதிரி தெரிகிறது.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *எங்களுடைய பிரச்சினையை சொன்னால், நீங்கள் அதற்கு வேறு ஒரு பதில் சொல்கிறீர்கள். அதற்கு என்ன செய்வது?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரிடத்தில் எங்கள் கோரிக்கையை வைக்கின்றோம். எங்களுடைய உரிமையை நாங்கள் கேட்டுப் பெறுவதற்காக உங்களிடத்தில் நாங்கள் கோரிக்கை வைக்கின்றோம். இரண்டாவது, ஏற்கெனவே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் ஒரு பிரச்சினையை எழுப்பி அமர்ந்திருப்பீர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்துவிடுகிறேன். நீங்களே பேசி, முழு விளக்கமும் நீங்களே சொல்லிவிடுகிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, நீங்களே முடியுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *எதிர்க்கட்சித் தலைவர் என்ற பொறுப்பு எனக்கு இருக்கின்றது. அதன் அடிப்படையில்தான் இதை நாங்கள் கேட்கின்றோம். இரண்டாவது, எதிர்க்கட்சித் தலைவர் இல்லாதபோது, அதற்கு மாற்றாக ஒருவரை நியமிக்கலாம் என்று சட்ட விதிகளில் இருக்கின்றது. அதன் அடிப்படையில்தான் நாங்கள் கேட்கின்றோம். அதன் அடிப்படையில்தான் காலம் காலமாக எதிர்க்கட்சித் தலைவர் இல்லாதபோது, துணைத் தலைவர்கள் வாயிலாக எதிர்க்கட்சி சொல்கின்ற கருத்துகள்*

2023 ஏப்ரல் 10] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

இங்கே அவையில் பதிவு செய்யப்படுகின்றன. அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, தொடர்ந்து மரபாக இருக்கிறது. ஆகவே, தற்போது இந்த மரபைக் கடைப்பிடிக்கவில்லை. இதை நாங்கள் கண்டிக்கிறோம். அதோடு, சட்டப்பேரவையில் அரசிற்கு பிரச்சினை வருகின்றபோது, சட்டப்பேரவை விதிகளை, அவர்களின் வசதிகளுக்கேற்ப தளர்த்துவது வாடிக்கையாகிவிட்டது. சட்டப்பேரவை விதிகளின்படி, ஜனநாயக முறைப்படியும், மரபுப்படியும், நடப்பதில்லை. சட்டமன்றம் வெளிப்படைத் தன்மையுடன் நடப்பதில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, இதையெல்லாம் கண்டித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. அய்யப்பன் மற்றும் திரு. ஆர். வைத்திலிங்கம் ஆகியோர் அவையில் இல்லை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவையில் உட்கார்ந்துகொண்டு யாரும் பேசக் கூடாது. யாராக இருந்தாலும், அவையில் உட்கார்ந்துகொண்டு தயவுசெய்து பேசக் கூடாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது நான் சொன்னதுதான், ஏதோ ஒரு நோக்கத்தோடு வந்திருக்கிறீர்கள் என்று. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தினுடைய விதியைத் தளர்த்துவதுபற்றி, எதிர்த்துப் பேசிவிட்டுப் போகிறார். விதியைத் தளர்த்தி, வழிகாட்டியதே இவர்கள்தான். விதியைத் தளர்த்தித்தான், திரு. சென்னாரெட்டி அவர்கள்மீது தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் மறந்துவிட்டுப் போகிறார்கள்.*

3. அரசினர் தீர்மானங்கள்

(அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானங்கள். குழுக்களுக்கான தேர்தல். மதிப்பீட்டுக் குழு. மதிப்பீட்டுக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*